★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 8

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 14உ வியாழன் (26—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 15உ வெள்ளி (27—4—56) [இதழ் 269

ஆயிரக்கணக்கானோர் கைது

பம்பாய், ஏப். 25—

சம்யுக்த மராட்டியம் கோரி, பம்பாய் மாநிலமெங்கும் நடைபெற்றுவரும் கிளர்ச்சியில், ஆயிரக்கணக்கானோர் சிறைபிடிக்கப்பட்டிருக்கின்றனர்.

பம்பாய் மராட்டியத்துடன் இணைய வேண்டும் என்பதற்காக நடைபெறும் இந்தக் கிளர்ச்சியில், கடந்த மார்ச் 9-ந் தேதி முதல் ஏப்ரல் 4-ந் தேதி முடிய சுமார் 2,343 பேர் கைதாகியிருப்பதாக பம்பாய் சட்டசபையில், முதன்மந்திரி மொரார்ஜி தேசாய் தகவல்

(4-ம் பக்கம் பார்க்க)

நாடகமா? நல்லெண்ணமா? அல்லது இரண்டுமா?

'பம்பாய் பிரச்சினை இரண்டிலொன்று முடிவாக வேண்டும்'

'முடிவு காண பத்து நாட்களானாலும் அதுவரை பணி புரிய மாட்டேன்'

நிதி அமைச்சர் தேஷ்முக்கின் விசித்திர 'ஒத்துழையாமை'!

அவரின் மனத்தை மாற்ற காங்கிரஸ் பெரிய புள்ளிகள் இமாலய முயற்சி!

பம்பாய் நகரப் பிரச்சினை பெரும் புயலாக உருவெடுக்கிறது.

நேரு பண்டிதரின் அமைச்சர் அவையை சிதறடித்து விடக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டு இருக்கிறது.

நிதி அமைச்சர் தேஷ்முக் அவர்களைப் பதவியைவிட்டு விலகவும் விடாமல், தொடர்ந்து வைத்திருக்கவும் முடியாமல் திணறுகிறார் நேரு பெருமான்!

தம்மைத் தேர்ந்தெடுத்த பெல்காம் வாக்காளர்களின் சீற்றத்திற்கு அஞ்சியும், அல்லது அஞ்சுவதுபோல் காட்டியும், வெளியேறத் துணிந்தும் அல்லது துணிந்துள்ளதுபோல் நடித்தும், தேஷ்முக், பதவியைத் துறக்க அனுமதி கோருகிறார்; அதே நேரத்தில், பதவியை விட்டுவிடவும் மனமில்லாமல் அவர் திண்டாடுகிறார்.

அமைச்சராக—அதிலும் பொறுப்புள்ள நிதி அமைச்சராக இருந்து கொண்டே, அதற்குரிய அலுவல்களைக் கவனிப்பதைத் தவிர்த்து வருகிறார் தேஷ்முக்!

பம்பாய் நகரின் இறுதியான முடிவு தெரிகிற ஒருவாரமோ பத்து நாட்களோவரை, தம் கடமையைச் செய்துவர முடியாது எனவும், அந்நாட்களைத் தமது ஓய்வு நாட்களாகக் கொள்ள வேண்டுமென்றும் தேஷ்முக், பிரதமருக்கு விண்ணப்பித்துக் கொண்டுள்ளார்.

நிதி அமைச்சர் அவர்கள் பதவியைவிட்டு உடனடியாக விலகிச் செல்லக்கூடாது என்றும், மாகாண சீர்திருத்த மசோதா மீது வாய் திறக்காது இருக்க வேண்டுமென்றும், அவரிடம் மன்றாடி முறையிட்டுக் கொள்ளுகிறார், இந்தியப் பிரதமர், நேரு!

அவர் மட்டுமா, அக்காவடியைத் தூக்குகிறார்? இல்லை.

அத்தூதுக் காவடி கோஷ்டியில், அபுல்கலாம் ஆசாத் இருக்கிறார்; என். வி. காட்கில் இருக்கிறார்; பெரோஸ் காந்தி, தேவ காந்தபரோ ஆகிய இருவரும் இருக்கின்றனர்!

தேஷ்முக்கின் போக்கு விசித்திர 'ஒத்துழையாமை'யாக இருக்கிறது! இந்தியப் பிரதமரின் போக்கும், முன்னையதைத் தோற்கடிக்கக் கூடிய அற்புத 'அரசியல் நடைமுறை'யாக இருக்கிறது!

பம்பாய் நகர், மராட்டிய மண்டலத்தின் தலைநகர் ஆகுமோ? அல்லது மேற்கூறிய 'அரசியல் கூத்து'த்தான் இறுதி விளைவாகுமோ?

இரயில்கள் தாமதமாக ஓடுவதை எதிர்த்துப் பிரயாணிகள் மறியல்!

எட்டு மணி நேரம் போக்கு - வரத்து தடைப்பட்டது

கல்கத்தா, ஏப். 24—

தென் கிழக்கு இரயில்வேயில் கல்கத்தாவிற்கும்—கோரக்பூருக்குமிடையில், இன்று காலை 7 மணி முதல் மாலை 3 மணிவரை எல்லா இரயி களும் நின்றுவிட்டன

இங்கிருந்து 25 மைல் தொலைவில் உள்ள பிர்ஷிப்பூர் எனும் ஊரில் ஒரு பிரயாணிகள் கூட்டம், இரயில் பாதையில் உட்கார்ந்து கொண்டு மறியல் நடத்தியதினாலேயே இரயில் போக்கு-வரத்து பாதிக்கப்பட்டதாம்.

இரயில்கள் தாமதமாக வருவது ஒரு வழக்கமாகவே மாறிவிட்டிருப்பதை எதிர்த்தே பிரயாணிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனராம்!

பம்பாயிலிருந்தும், சென்னையிலிருந்தும் கல்கத்தா செல்லும் மெயில் வண்டிகளைக்கூட, மறியல் செய்து பிரயாணிகள் நிறுத்திவிட்டனராம்!

5,000 ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கிழக்கு வங்க சர்க்காருக்கு எதிராக நடவடிக்கை

டாக்கா, ஏப். 25—

சர்க்கார் அலுவலக சேவகர்களும், மருத்துவமனையில் எடுபிடி வேலை பார்ப்பவர்களுமான சுமார் 5,000 தொழிலாளர்கள், இங்கு இன்று, காலை முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

தங்களுக்குச் சம்பள விகிதம் திருத்தி, அமைத்துத் தரவேண்டும்; இலவச வீட்டுவசதி வேண்டும்—வாழ்க்கை நிலை உயர வேண்டும் என்று, அந்தத் தொழிலாளர்கள் கோரிக்கை தெரிவித்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

டாக்கா நகர் பற்றிய விவரங்கள் தான் இவை; இன்னும், கிழக்கு வங்க மாநில முழுவதிலும் உள்ள தொழிலாளர்கள் எத்தனை பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பது தெரியவில்லை.

வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் எல்லோரையும் வேலையினின்று விலக்கி வைத்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தக்க காரணம் கூறுவிடில் வேலையினின்று அறவே ஒழிக்கப்படுவார்கள் என்றும் முதலமைச்சர் அபுஉசேன் எச்சரித்திருக்கிறாரெனத் தெரிகிறது.

இன்னும் இந்த நிலை!

காசி, ஏப். 25—

காசி விசுவநாதர் ஆலயத்திற்குள் செல்ல முயன்ற தாழ்த்தப்பட்டோர் குழு ஒன்றை சனாதனிகள் பலர் தடுத்து நிறுத்தி அடித்திருக்கின்றனர். போலீசார் விரைந்து சென்று தடியடிப்பிரயோகத்தின் மூலம் இருதரப்பினரையும் கலைத்தனராம்.

கோயிலுக்குச் செல்ல முயன்ற குழுவினரில் 150 பேர்கள் இருந்தனரென்றும், அவர்களில் 2 எம். எல். ஏக்கள் இருந்தனரென்றும், கலவரத்தில் அவர்கள் காயமடைந்தனரென்றும் தெரிய வருகிறது.

'ரஷ்யாவின் நிலையில் அமெரிக்காவும் உள்ளது'

தானே இயங்கும் 'ராக்கெட்' குண்டுகள் முன்னேற்றத்தில் ரஷ்யா எந்நிலையிலுள்ளதோ, அதே நிலையில்தான் அமெரிக்கா இருப்பதாகவும், 'ராக்கெட்' குண்டுகளை அதிகரிக்கும் வேலையில் அமெரிக்கா துரிதமாக ஈடுபட்டிருப்பதாகவும் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவர் குறிப்பிட்டுள்ளார்.

பயன் ஏற்படுமென எண்ணவில்லையாம்!

பிரிட்டனில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் ரஷ்யத் தலைவர்கள் அமெரிக்காவிற்கு வருவதால் இப்போதைக்கு எவ்வித பயனும் ஏற்படுமென்று தான் எண்ணவில்லை என அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கூறியுள்ளார்.

திட்டங்கள் தருவதில்லையாம்—திட்டுவதுதான் வேலையாம்!

தி. மு. கழகத்தைக் குறித்து காமராசர் குளறல்

பேராவூரணி, ஏப். 25—

கடந்த 22-ந் தேதியன்று இங்கு வந்திருந்த முதலமைச்சர் காமராசர், பொதுக்கூட்டமொன்றில், தி. மு. கழகத்தைப் பற்றித் தாறுமாறாக குளறிவழிந்திருக்கிறார்.

அவரது வாசகங்களே 'அவர் எவ்வளவு' என்பதைத் தெளிவாக்குவனவாயுள்ளன என்பதால் விளக்கத்துடன் வெளியிடப்படவில்லை.

கழகத்தின்மீது வசை பாடப் புறப்பட்டிருக்கும் காமராசர், சற்று நிதானமாக யோசித்துப் பேசினால் பரவாயில்லை என்று அவர் பேசக்கேட்ட மக்கள் கூறுகின்றனராம்.

'கழகத்தைத் திட்ட வேண்டும்—தாக்க வேண்டும் என்று கருதினால், அவர் தன்னுடைய அதிகாரிகள் சிலரை அனுப்பினால், அவர்களேனும், கழகத்தைத் தாக்க வழிமுறைகளைக் கற்றுத் தருவரே! அதையும் விடுத்து, தாக்குவதாக நினைத்து, தன்னையே மேலும் தாழ்த்திக்கொள்ளும் போக்கில் காமராசர் ஏன் செல்கிறார்' என்று கூட்டத்தை நடத்திய காங்கிரசாரில் சிலர் கவலைப்பட்டனராம்! ஊர் மக்கள் செய்யும் கேலி தாளாமல் வருந்துகின்றனராம்!

காமராசர் கொட்டிய 'முத்து'க்கள் இங்கு தரப்படுகிறது:

"மக்கள் எங்களுக்கு மாலைகள் போட்டு மரியாதை செய்வதையும், பாராட்டுப் பத்திரங்கள் வாசிப்பதையும் பார்த்துவிட்டு, மாற்றுக் கட்சிக்காரர்கள், பொறாமைப்படுகிறார்கள்; நாங்கள் மக்களுக்கு எவ்வளவு நன்மை செய்தாலும், அவர்கள் சதா குறைகூறிக்கொண்டேயிருப்பார்கள். நம்மைத் திட்டுவதற்கென்றே ஒரு கட்சி இருக்கிறது; அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். திராவிட கழகத்தைச் சொல்லவில்லை; முன்னேற்றக் கட்சிக்காரர்கள்தான், கிராமம் கிராமமாகச் சென்று நம்மைத் திட்டிக் கொண்டு வருகிறார்கள்; அவர்கள் திட்டுவதிலே ஏதேனும் அர்த்தமுண்டாவென்றால் அதுவும் கிடையாது.

"நம்மைத் திட்டுகின்ற தி. மு. கழகத்தினர், மக்களுக்கு ஏதாவது நல்ல திட்டங்களையாவது தருகிறார்களா? 'காங்கிரஸ் மந்திரி சபையினர் 100 பள்ளிக்கூடம் கட்டித் தரும் இடத்திலே நாங்கள் 200 பள்ளிக்கூடம் கட்டித் தருகிறோம்' என்று கூறட்டுமே பார்க்கலாம்! அதெல்லாம் ஒன்றுமிருக்காது. அடுக்குத் தொடரிலே அழகாகப் பேசிவிட்டுப் போவார்கள்; அதோடு சரி!

"'இராமாயணத்திலே தமிழர்களை அரக்கர்கள் என்றுஎழுதப்பட்டிருக்கிறது; இதைப் பார்த்துக் கொண்டு தன்மானத் தமிழர்கள் பொறுத்திருக்கக்கூடாது' என்று கூறுகிற தி. மு. கழகத்தினர், நம்மைப் பார்த்து 'அரக்கர்கள்' என்கிறார்கள்' நம் ஆட்சி அரக்கராட்சி என்று அவர்கள் பத்திரிகையில் எழுதுகிறார்கள்; பார்த்தீர்களா அவர்களுடைய தவறான போக்கை?

"நான் இதையெல்லாம் எதற்காகக் கூறுகிறேன் என்றால், இந்த ஊரிலும் முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். நான் வரும்போது ஊர் எல்லையில் பல கொடிகள் என் கண்களுக்குத் தென்பட்டன. துறைமுகப் பட்டினங்களில் பல கொடிகள் காணப்படுவது போல இங்குக் காணப்பட்டன.

"கம்யூனிஸ்டுகள் ஒரு காலத்தில் நம்மை இப்படித்தான் திட்டினார்கள்; இப்போது நிறுத்திவிட்டார்கள்; அவர்கள் இப்பொழுது மிகவும் நல்லவர்களாகிவிட்டனர். மற்றக் கட்சிகளைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் மட்டும்தான் நம்மை 'கன்னா பின்னா' என்று திட்டுகிறார்கள்; காரணம், மந்திரிகளாக வர அவர்களுக்கு ஆசை! அதனால்தான் இவ்வாறு, அவர்கள் பேசுகிறார்;

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

கள். அவர்கள் பேச்சிலே மக்கள் மயங்கி ஏமாந்துவிடமாட்டார்கள்; நீங்களும் ஏமாறமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

"நீங்கள் எனக்கு அளித்த வரவேற்புப் பத்திரங்களை முறையாகப் படிக்க தற்போது நேரமில்லை மன்னியுங்கள்; நீங்கள் இப்போது படித்துச் சொன்னாலும், உங்களுடைய குறைகளை நான் சென்னை சென்றதும் மறந்துவிடுவேன்; அதனால், இந்தப் பத்திரங்களையெல்லாம் அங்குபோய் படித்துப் பார்த்து ஆகவேண்டியதைச் செய்கிறேன்.

"நான் மந்திரியாக இருப்பதால் மட்டும் நீங்கள் மாலை போட்டு வரவேற்கவில்லை; இந்த பொறுப்பை ஏற்கா முன்னரே, சென்ற மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்திருக்கிறேன்; அப்போதும்இப்படித்தான் என்னை வரவேற்று உபசரித்தீர்கள்; ஆகையால், மந்திரியாக வந்தால்தான் மாலைகளும், வரவேற்புப் பத்திரங்களும் கிடைக்கும் என்று தி. மு. கழகத்தினர் கருதினால், அது தவறு; மந்திரி பதவி சாசுவதமானதல்ல! ஆகவே, நீங்கள் கட்டுப்பாட்டோடு இருந்து காங்கிரசைப் பலப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்."

(8-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 26—4—'56 வியாழன்

சரித்திரப் புரட்டு!

இந்தியத் துணைக்கண்டத்தின் சுதந்திர வரலாற்றை எழுதுவதற்காக, ஒரு வரலாற்று ஆசிரியர் குழுவை இந்தியப் பேரரசு நியமித்தது. அதற்கென இலட்சக் கணக்கில் ரூபாயை செலவிடவும் அரசாங்கம் செய்தது.

மூன்று நான்கு ஆண்டுக் காலம் கழிந்த பின்னருங்கூட சுதந்திர வரலாறு உருவெடுக்கவில்லை. அந்தக் குழு, எடுத்துக் கொண்ட பணியை நிறைவேற்றுகின்ற வரையில் கூட செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

அக்குழுவில் இடம் பெற்றிருந்த வரலாற்று ஆசிரியர்களிடை பலவிதமான கருத்து வேற்றுமைகள் இடம் பெற்றன. அக்கருத்து வேற்றுமைகளும் அக்குழுவை உருவாக்கிய அரசாங்கத்தின், பிடிவாத குணத்தின் அடிப்படையாகவே எழலாயின.

காங்கிரஸ் கிளர்ச்சிகளை மையமாகக் கொண்டே சுதந்திர வரலாறு ஆக்கப்பட வேண்டும் என்பது இந்தியப் பேரரசின் உள்ளக்கிடக்கை. அவ்வுள்ளக்கிடக்கைக்கொப்பத்தான் வரலாற்றை உருவாக்க வேண்டும் என்று, அக்குழுவிலிருந்த ஆசிரியர்கள் வற்புறுத்தப்பட்டனர்.

அக்குழுவில் இடம் பெற்றிருந்த இரண்டொரு வரலாற்று ஆசிரியர்கள்தான், அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்ப செயல்பட ஒப்பினர். மற்றவர்கள் அனைவரும், கிடைக்கக்கூடிய சாதக பாதகமான சான்றுகளைக் கொண்டு உருவாக்கப்படும் ஒன்றுதான் உள்ளதை உள்ளபடி உணர்த்தும் வரலாருக அமைய முடியுமே அல்லாது, முன்கூட்டியே உறுதி செய்த முடிவிற்கு ஒப்பக் கிடைக்கும் சான்றுகளை திரித்துப் பொருள் கொடுத்து ஆக்கப்படும் ஒன்றை வரலாறு எனக் கொள்ள முடியாது என்று கூறிவிட்டனர். அத்தகு பணி வரலாற்று ஆசிரியர் தன்மையையே களங்கப்படுத்தக்கூடியது என்றும் அறிவித்துவிட்டு, குழுவிலிருந்து விலகிக்கொண்டனர்.

வரலாறு என்பது இதிகாசம் போன்ற புராண ஏடு அல்ல. எத்தகைய பொய்யையும் கற்பனை செய்து கூறி ஒரு புராணத்தை இயற்றிவிடுவது எவருக்கும் எளிதாகும். ஆனால் வரலாறு அது போன்றதல்ல. நிகழ்ந்துள்ள சம்பவங்களைத் தொகுத்து, அவைகளிலிருந்து உருவாகும் மாற்றங்களையும் விளைவுகளையும் விளக்கிக் காட்டுவதே வரலாறு எனப்படும். அத்தகு வரலாறு குறிப்பிட்ட ஒரு நாட்டிற்கு மாசளிப்பதாகவும அமையக்கூடும்; புகழ் சேர்ப்பதாகவும் விளங்கக் கூடும். குறிப்பிட்ட ஒரு நாட்டு வரலாற்றில் இரண்டும் கலந்திருக்கிறது என்பதற்காக, கறைபடுத்தும் பகுதிகளையும், சான்றுகளையும் மறைத்துவிட்டு, சிறப்பளிக்கும் பகுதிகளையும் சான்றுகளையும் மட்டுமே எடுத்துக்காட்டி ஏடு தீட்டுவது, வரலாறு ஆகாது; அது வெறும் பிரச்சார ஏடாகத்தான் இருக்க முடியும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் சுதந்திர வரலாறு என்ற பெயரால், காங்கிரஸ் கிளர்ச்சிகளுக்குரிய சிறப்பைக் காட்டிலும் கூடுதலான சிறப்பை ஏற்படுத்தி விடவேண்டும் என்பது காங்கிரஸ் மேலிடத்தின் எண்ணம். அவ்வெண்ணத்தின் தீவிரமான நடைமுறைதான் வரலாற்று ஆசிரியர் குழு நியமனம்.

வரலாற்றுத் துறையையும் ஒரு புராணக் கலையாக மாற்றிவிடக்கூடாதென்பதில் அக்கறையும், வரலாற்றை உண்மை கூறும் ஒரு கலையாகவே காப்பாற்றவேண்டும் என்பதில் கருத்தும் கொண்ட வரலாற்று ஆசிரியர்கள், இந்தியப் பேரரசின் விருப்பத்திற்கிணங்க செயல்பட மறுத்துவிட்டனர். மறுத்துவிட்டதுடன், ஆட்சிப் பொறுப்பில் உள்ள காங்கிரஸ் தலைமையின் தவருன மனப்போக்கையும் நாட்டு மக்களுக்கு அறிவித்தும்விட்டார்கள். நிற்க,

பாகிஸ்தான் ஏற்பட்ட வரலாற்றை, இந்தத் தலைமுறையில் இருக்கின்ற வாய்ப்புப் பெற்றுள்ள அனைவரும் அறிந்தே இருக்கிருர்கள். பாகிஸ்தான் கோரிக்கைக்கு முஸ்லிம் மக்கள் தந்த ஆதரவைக் குறைத்து மதிப்பிடுவது நிகழ்ந்த உண்மையை ஒளிக்காது கூறினதாகாது. ஆனல் இந்தியப் பிரதமர் உள்பட, காங்கிரஸ் சோட்டா தலைவர்கள் வரை, அந்த மகத்தான வரலாற்று உண்மையை ஒப்புக்கொள்ளுவது கிடையாது.

வரலாற்று உண்மையை ஒப்புக்கொள்ள மறுப்பதுடன், தங்கள் அவாவை வரலாற்று உண்மையெனச் சாதிக்கவும் முன்வருகின்றனர். இப்போக்கை சுட்டிக்காட்டுபவர்கள் மீதும் சீறிப்பாய்கின்றனர்.

பாகிஸ்தான் மக்கள் அனைவரும் காங்கிரஸ் நடத்திய விடுதலைக் கிளர்ச்சியில் கலந்துகொண்டவர்களாம். ஆனல், அங்கு இப்பொழுது அதிகாரத்தில் உள்ள தலைவர்கள் அனைவரும், சுதந்திரக் கிளர்ச்சியை ஒடுக்க பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் ஒத்துழைத்தவர்களாம். இவ்வாறு நிலைமையை விளக்கி இருக்கிருர் இந்தியப் பிரதமர் நேரு பெருமான்.

காலஞ் சென்ற ஜின்னுவின் தலைமையில் முஸ்லிம் லீக் பாகிஸ்தான் கோரிக்கையை வெளியிட்ட காலத்திலும், இப்பொழுது உள்ளவர்களே போன்றுதான், மற்றத் தலைவர்களும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஏதாவது ஒருவகையில் ஊழியம் செய்தவர்களாக இருந்தனர். அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் ஊழியம் செய்தவர்களாக இருந்தபோதிலும் கூட, பெரும்பாலான முஸ்லிம் மக்களின் பேராதரவிற்கும் அவர்கள் பாத்திரங்களாக இருந்தனர்.

பொதுமக்களின் ஆதரவும் அன்பும் சிறை சென்றதாலும் வேறு பல இன்னல்களுக்கு ஆளானதாலும் காங்கிரஸ் தலைவர்களுக்குக் கிடைத்தது. ஆனல், பெருந்திரளான முஸ்லிம் மக்களின் ஆதரவும் அன்பும், பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஊழியர்களாக இருந்த நிலையிலும் கூட, லீக் தலைவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இது ஒரு சரித்திர விசித்திரம்!

பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்து ஊதுகிறவர்கள் ஆயிற்றே என்பதற்காக, தேர்தல்களில் லீக் அபேட்சகர்களை ஆதரிக்காது இருந்துவிடவில்லை முஸ்லிம்கள். அதேபோன்று காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து சுதந்திரக் கிளர்ச்சியில் இரண்டறக் கலந்தவர்கள் ஆயிற்றே என்பதற்காக, காங்கிரஸ் கட்சியின் பக்கபலத்துடன், லீக் அபேட்சகர்களை தேர்தலில் எதிர்த்து நின்ற, தேசிய முஸ்லிம் தலைவர்களை, முஸ்லிம் மக்கள் மண்ணைக் கவ்வச் செய்யாமலும் இல்லை. இதுவும் ஒரு சரித்திர விசித்திரம்.

அக்காலத்தில் காங்கிரஸ் கட்சியின் கைப்பாவைகளாக செயல்பட்டு வந்த தேசிய முஸ்லிம் தலைவர்களை, காங்கிரஸ் ஏடுகள் எவ்வளவு பாராட்டி எழுதினவோ, அந்த அளவிற்குக் கூடுதலாகத்தான் லீக் தலைவர்களை தாழ்த்தி எழுதின. இருந்தாலும், முஸ்லிம ஜனத்திரள் லீக் பக்கத்திலேயே அணிவகுத்திருந்தது.

இந்தியப் பிரதமர் நேரு கூறுவதுபோன்று, பெருவாரியான முஸ்லிம் மக்களின் ஆதரவு காங்கிரசிற்கு இருந்திருக்குமாளுல், அப்பொழுது நடைபெற்றத் தேர்தல் அனைத்திலும் கலந்துகொண்ட தேசிய முஸ்லிம்கள் தோற்கவும் லீக் முஸ்லிம்கள்ஜெபிக்கவுமான நிலைமை ஏற்பட்டு இருக்காது. அத்தகு நிலைமை நேர்ந்திருக்காது இருந்தால், விரல்விட்டு எண்ணக் கூடிய லீக் தலைவர்களின் சாமர்த்தியத்தினலேயே பாகிஸ்தான் நிர்மாணமாகியும் இருக்காது.

பொதுமக்களின் ஆதரவு காங்கிரஸ் கட்சிக்கு இருந்தது என்பதுபோலவே, லீக் கட்சிக்கும் முஸ்லிம் மக்களின் ஆதரவு தேவையான அளவிற்கு இருந்தது என்பதைத்தான், அக்காலத்து நாட்டு வரலாறு மெய்ப்பிக்கிறது. அதன் பலனுகத்தான், பிரிட்டிஷ் ஆட்சியும், பாகிஸ்தான் அமைப்புக்கு இணங்கியது.

தேர்தல்கள் மூலம் லீக் காட்டிய பலத்தை உணர்ந்திருந்த காரணமாகத்தான், பாகிஸ்தான் கோரிக்கைக்கு பிரிட்டிஷ் காட்டிய ஆதரவை வேறு கதியற்ற நிலையில் ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் காங்கிரஸ் கட்சிக்கும் ஏற்பட்டது.

தேசிய முஸ்லிம் தலைவர்களை நம்பி காங்கிரஸ் நடத்திய அரசியல் நாடகம், அது எதிர் பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. இதை நன்கு அறிந்திருந்தும்கூட இந்தியப் பிரதமர் நேரு வரலாற்றில் புரட்டை நுழைக்கப் பார்க்கின்ருர். நாமும் ஒரு வரலாற்று ஆசிரியர் என்ற நினைப்பில், இப்புரட்டை மேற்கொள்ளுகிருர் போலும்!

இதுபோல சரித்திரத்தை புரட்டு செய்யும் பண்டித நேரு பிரதமராகவிருந்து நியமிக்கும் ஒரு வரலாற்றுக் குழு, அவரை விட எப்படி நேர்மையாக நடந்துகொள்ளும் என்று எதிர்பார்ப்பது?

சுதந்திரத் தமிழ் இலங்கை

மக்கள்சபையில் குரல்எழும்புகிறது

இலங்கைத் தமிழரின் எதிர்காலம் எப்படி?

கொழும்பு, ஏப். 24—

இலங்கையில் 'சுதந்திரத் தமிழ் இலங்கை' உருவாக வேண்டும் என்ற எண்ணம், மக்களிடையே நாளுக்கு நாள் வலுத்து வருவதாக தகவல் தரப்படுகிறது. பண்டார நாயகாவைத் தலைவராகக் கொண்ட புதிய சர்க்கார், சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நியாயம் வழங்கும் என்ற நம்பிக்கைத் துவக்கத்திலேயே, தமிழர்களில் எவருக்கும் இல்லாமலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

"தமிழ் பிரதேசங்களுக்கு முழு உரிமைகள்வழங்கும், ஒரு 'பெடரல் முறை சர்க்கார்' அமையாது போகுமாளுல், தமிழர்கள், தங்களின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, 'காமன் வெல்த்'திற்கு உட்பட்ட ஒரு 'சுதந்திரத் தமிழ் இலங்கை' அமைப்பதற்கு, மக்கள் சபைக்கு வெளியிலிருந்தும் போராடுவார்கள்,"

என்று, இலங்கை மக்கள் சபையில் உள்ள தமிழ் உறுப்பினரான சுந்தரலிங்கம் குறிப்பிட்டிருக்கிருர்.

கவர்னர் - ஜெனரல் சபையில் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவித்து நிறைவேற்றப்படவிருக்கும் தீர்மானத்திற்கு தோழர் சுந்தரலிங்கம் ஒரு திருத்தம் தந்திருக்கிருர்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளவை, தமிழர்களின் எதிர்காலத்தைப் பொறுத்த முக்கியமான அம்சங்களாகும்.

"தமிழர்கள் தங்களின் தனித்தன்மை, சுதந்திரம் கலாச்சாரம் இவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், வடக்கு கிழக்கு இலங்கையில் தங்களின் பரம்பரைத் தாயகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும்தான், சுதந்திரத் தமிழ் இலங்கை கோருகின்றனர்.

"சிறுபான்மையினருக்கு வழங்கிய உறுதிமொழிகளை சர்க்கார் காற்றில் பறக்கவிட்டுவிட்டனர்; ஜனநாயகத்தை, அழித்துவிட்டனர்; இலங்கை சர்க்கார் இப்போது முழுக்க முழுக்க சிங்களவர் சர்க்காராக ஆக்கப்பட்டுவிட்டது.

"சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு ஊறுதேடுவனவாக உள்ள அம்சங்கள் :—

1. மந்திரி சபையில் சிறுபான்மையினரான தமிழருக்கு பிரதிநிதித்துவம் இல்லை. மக்கள் சபையில், இலங்கையில் பதிவு பெற்ற குடிமக்களாகியுள்ள இந்தியர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை.

2. இலங்கையின் ஆட்சிமொழி என்ற வகையில் தமிழ் அனுபவித்துவந்த சமநிலை உரிமை, சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்படும் என்ற நடவடிக்கையால் பறிக்கப்பட்டிருக்கிறது.

3. தமிழ் மக்களுக்கு சம உரிமையும், சமசந்தர்ப்பமும் அளிக்கப்படும் என்பதாக சர்க்காருக்கு விருப்பமில்லை. இது குறித்து, மக்கள் சபைத் துவக்கக் கூட்டத்தில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. மொழிக் காரணங்களுக்காகத் தமிழ் மக்கள் பாரபட்சமாக நடத்தப் படுகிருர்கள் என்ற அதிருப்தி அகலும்வகையில், அந்த அதிருப்தியைப் போக்குவதுபற்றி, கவர்னர்-ஜெனரல் தமது உரையில் ஏதும் குறிப்பிடவில்லை."

இம்மாதிரி காரணங்களை தோழர் சுந்தரலிங்கம், தமது திருத்தத்தில் சுட்டிக்காட்டியிருக்கிருர்.

தாக்குதல் கண்டு நாகர் ஆவேசம்!

எதிர்த்துப் போரிடுவதில் தீவிரம் காட்டுகின்றனர்!

போராட்டத் தலைவரின் துணைவியாரும் கைது

ஷில்லாங், ஏப். 24—

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நாகர் தலைவரான பிஜோவின் வாழ்க்கைத் துணைவியார், இரு மாதங்களுக்கு முன் கைது செய்யப்பட்டார் என்றும், அவரையும், அவருடன் கைதான அவரது உறவினர் சிலரையும் இப்போது நாகமலைப் பகுதிச் சிறையிலிருந்து அசாம் சமவெளிப் பகுதியில் உள்ள சிறைக்கூடத்திற்கு மாற்றிவிட டில்லி சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

சர்க்கார், இராணுவத்தினரையும், விசேட ஆயுதந் தாங்கிய போலீசாரையும் நாகமலைப் பகுதிகளுக்குள் அனுப்பி, தீவிரமான கிளர்ச்சிகளில் ஈடுபடும் நாகர்களை வேட்டையாடிக் கொண்டிருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே!

ஆனல், அரசியலாரின் அடக்குமுறை வலுக்க வலுக்க, நாகர்கள் தங்களின் கிளர்ச்சிகளை மேலும் தீவிரமாக்கி வருவதாயும், 'சுதந்திரப் பிரகடனம்' செய்து விட்டபின், அவர்கள் இப்போது இந்திய இராணுவத்தினரை அன்னிய நாட்டுவிரோதிகளாகவே பாவித்து தங்கள் 'சுதந்திர'த்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆவேசத்தோடு, இந்தியஇராணுவத்தினரை எதிர்த்துப் போரிட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

உலோக வார்ப்படத் தொழிற்சாலை

எங்கு அமையும்?

உலைக்களத்துடன் கூடிய உலோக வார்ப்படத் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கையொன்றைத் தயாரிக்க இந்திய சர்க்கார் நடவடிக்கையெடுத்து வருகின்றனர். மொத்தம் எத்தனை வார்ப்படத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதென்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அவற்றை அமைப்பதற்காக செலவு மதிப்பு பற்றியும், வேலையிலமர்த்தப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றியும் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னரே தெரியவரும். மற்றும் வார்ப்படத் தொழிற்சாலையை எங்கு அமைப்பது என்பது பற்றியும், அதன் பின்னரே முடிவு செய்யப்படும்.

இலாபம் கிடைத்ததாம்!

புதுடில்லி, ஏப். 24—

சர்க்கரை இறக்குமதி செய்ததின் மூலம் சர்க்காருக்கு ரூ. 8 கோடி இலாபம் கிடைத்திருக்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

4,15,772 சைக்கிள்கள் உற்பத்தியாம்

இந்தியாவில் 1955 ஜுலை 1-ந் தேதியிலிருந்து 1956 மார்ச் 31-ந் தேதி வரையுள்ள காலத்தில் மொத்தம் 4,15,772 சைக்கிள் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது; அவற்றில் 30,000 சைக்கிள்கள் சிறுதொழில்கள் பகுதியில் உற்பத்தியானவை.

உணவுப் பொருள்கள் விலையேற்றம்

சென்னை நகர நிலை விளக்கம்

சர்க்கார் என்ன செய்கிறது?

சென்னை, ஏப். 24—
விலைவாசிகள் ஏற்றம் சென்னை நகரில் மிகக் கடுமையாகி உள்ளது!

கடந்த இரண்டு மாத காலத்தில் அரிசி, எண்ணெய், மிளகாய் முதலிய அத்தியாவசியப் பொருள்கள் பல மடங்கு விலை ஏற்றத்திற்கு ஆளாகியுள்ளன; இதனுல், மக்கள் பெரும் அவதிக்கு ஆளாகியுள்ளனர்!

இரண்டு திங்களுக்கு முன் வீசை ரூ. 1—12—0 ஆக இருந்த நல்லெண்ணெய், இப்போது வீசை ரூ. 3 ஆக உயர்ந்து விட்டது.

மிளகாய் விலை 70 முதல் 80 சதவிகிதம்வரை உயர்ந்திருக்கிறது; இப்போது வீசை ரூ 3-4-0 ஆக விற்கப்படுகிறது!

அரிசி விலையும் அப்படியேதான்! நெல்லூர் பச்சரிசி பதினைந்து நாட்களுக்கு முன் படி 10 அணுவாக இருந்தது; இப்போது 13 அணுவாக உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளும் விலை ஏற்றத்திற்கு உட்பட்டவைதான்!

உளுந்து, முன்பு மூட்டை ரூ 45 ஆக விற்றது; இப்போது ரூ. 60 ஆக உயர்ந்து விட்டது!

விறகும்கூட இந்த விலை ஏற்றத்திற்குத் தப்பவில்லை!

இந்த அகவிலை ஏற்றம், மக்களை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதை அறிந்தும் சென்னை சர்க்கார் 'இதெல்லாம் கவனிக்கவேண்டியது டெல்லியின் வேலை' என்று கூறிவிட்டு வாளாவிருக்கின்றனர்!

நலிவுற்றோர் நல்வாழ்வு பெறத் திட்டங்கள்

சென்னை, ஏப். 24—
வாழ்க்கையில் தவறி நடந்த பெண்களுக்கு நல்லொழுக்கம் அளித்து மீண்டும் அவர்கள் நல் வாழ்க்கைத் துவக்குவதற்கு வசதி செய்து தரும் விடுதியொன்றைத் திருச்சி அல்லது தஞ்சையில் நிறுவப்பட வேண்டுமென, சென்னை அதிகாரிகள் கூட்டமொன்றில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

சமூக சேவைத் திட்டங்களுக்கென ரூ. 120 இலட்சம்வரை செலவழிக்கலாம் என்றும், பாதித் தொகையை இந்திய அரசியலார் தருவதாகவும், மீதியை மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை அல்லது திருச்சியில் நிறுவவிருக்கும் விடுதியில் 100 பெண்களுக்கு இடமிருக்குமாம். விடுதியுடன் தொழில் பள்ளிகள் நிறுவலாமெனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இளங்குற்றவாளிகளான சிறுவர் சிறுமியர்களுக்குத் தனித்தனியாக விடுதிகள் துவக்கவும், தற்போதுள்ளவற்றை விரிவாக்கவும் பல சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் விடுதலைப் பெற்ற கைதிகளுக்கு தொழிற் பயிற்சி அளிக்க வசதிகள் செய்ய சிபாரிசுகள் சில தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

வேலை செய்து பிழைப்பவர்களுக்கும், அதைவிட பிச்சையெடுத்து வாழ்பவர்களின் நலனுக்காக தொழில் கற்றுக்கொடுக்கக் கூடிய ஐந்து நிலையங்கள் நிறுவவும், பிச்சைக்காரர் விடுதி ஐந்து நிறுவவும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கென ரூ. 1,35,000 செலவாகுமாம். இவை முக்கியமான 'முனிசிபாலிடி'களில் நிறுவப்படுமெனத் தெரிகிறது.

மாநில மாநாட்டில் ஓவியக் காட்சி

கழகத் தோழர்களின் கவனத்திற்கு:

திருச்சி மாநில மாநாட்டில் நடைபெறவிருக்கும் ஓவியக் காட்சியில், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்கள் தங்கள் ஊர்களில் நடைபெற்ற கழக நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட படங்களைக் கொண்டுவந்து சிறப்பித்துவிட்டு, மீண்டும் எடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—விளம்பரக் குழு

மேலும் மின்சார வெட்டு

மேட்டூர் தேக்கத்தில் நீர்மட்டம் குறைவதே காரணமாம்

சென்னை, ஏப். 23—
வரும் ஏப்ரல் 30-ந் தேதி முதல் மின்சார வெட்டு, 25 சதவிகிதத்திலிருந்து 40 சத விகிதமாக உயரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. காரணம் மேட்டூர் தேக்கத்தில் நீர் மட்டம் மிகக் குறைவாக இருப்பதேயாம்.

விஞ்ஞானம் வளருகிறது!

லண்டன், ஏப். 22—
சொற்பொழிவுகளைக் கேட்டு, அதை வேண்டிய மொழியில் மொழி பெயர்த்துத்தரும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறதாம். இவ்வாண்டிற்குள்ளாக அதைத் தயாரித்துத் தருவதில் துரித முன்னேற்றம் காணப்படுவதாகத் தெரிகிறது.

அச்சடிக்கப்பட்ட தஸ்தாவேசுகளை மற்றைய மொழிகளில் மொழி பெயர்க்கும் இயந்திரங்களைக் கண்டு பிடிப்பதில் பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் முயற்சிகள் நடந்து வருகின்றனவாம்.

இப்புது இயந்திரம் உபயோகத்திற்கு வரச் சில நாட்களாகும் எனத் தெரிகிறது. அப்படி உபயோகத்திற்கு வந்தாலும், அது மெதுவாகத்தான் வேலை செய்யுமாம்!

சிறிய அளவில் உப்பு உற்பத்தி செய்பவர்கள்

ஆட்சியினரால் 'சலுகை' காட்டப்படுகிறது

புதுடில்லி, ஏப். 23—
சிறிய அளவில் உப்பு உற்பத்தி செய்யும் தனிப்பட்டவர்கள் (10 ஏகருக்கு மேலும், 100 ஏகருக்குள்ளும் வைத்திருப்போரும், கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராயுள்ளோரும்) இனி மணங்குக்கு 2 அணுவுக்குப் பதிலாக ஒரு அணு 'செஸ்' (குறைக்கப்பட்ட விகிதம்) செலுத்தினுல் போதுமென அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் 2 அணு 'செஸ்' கட்டவேண்டுமாம்.

அரிசி விலை இறங்கி வருகிறதாம்

டெல்லி மந்திரியின் கூற்று

புதுடில்லி, ஏப். 24—
உணவுப் பொருள்களின் விலைவாசிகள் விஷம்போல் ஏறிக் கொண்டிருக்கின்றன! வாழ்க்கைத்தரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது! இந்த நிலையை, சர்க்கார், எட்ட நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனரே என்று மக்கள் வேதனைக்குரல் கொடுத்துக் கொண்டிருக்கும்போது, டெல்லி மக்கள் சபையில், விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக், விலைவாசிகள்—குறிப்பாக நெல்விலை குறைந்து வருகிறது என்று பேசியிருக்கிறார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், சர்க்கார் மேற்கொண்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளின் காரணமாக நெல் விலை இறங்கிவருவதாகக் கூறினாராம்.

அரிசி ஏற்றுமதியைத் தடுத்திருப்பது, சர்க்கார் கைவசமுள்ள சேமிப்பிலிருந்து அரிசியை சந்தைக்கு அனுப்புவது போன்ற நடவடிக்கைகள் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தி வருகின்றனவாம்.

'அரிசி விலை ஏற்றத்திற்குக் காரணமான, அரிசியைப் பதுக்கி வைக்கும் பெரும் வியாபாரிகள் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கின்றனர்?' என்று, தோழர் முத்துசாமி வல்லத்தரசு கேட்டபோது, 'சர்க்கார் வசமுள்ள பொருள்களை மார்க்கெட்டிற்கு அனுப்புவதுதான், அத்தகு வியாபாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கையாகும்' என்றும் மந்திரி பதிலளித்தாராம்.

மாநிலங்கள் சபை புதிய உறுப்பினர்கள்

தலைவரின் கால்களைத் தொட்டு கண்களில் ஒத்திக்கொண்டனராம்

புதுடில்லி, ஏப். 24—
மாநிலங்கள் சபைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், பதவிப் பிரமாணம்' எடுத்துக் கொண்டதும், சபைத் தலைவருக்கு வணக்கம் செலுத்துவதில் புதிய முறை ஒன்றைக் கையாண்டனர் என்று தெரியவருகிறது.

பீகார் காங்கிரசைச் சேர்ந்த தாஜாமுல் உசேன் என்ற உறுப்பினர் பதவிப் பிரமாணம் எடுத்ததும், தலைவரின் கைகளைக் குலுக்கி விட்டு, அவரது பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டாராம். இது கண்ட இதர உறுப்பினர்கள் ஆரவாரம் செய்தனராம்.

பின்னர், தமிழ் நாட்டைச் சேர்ந்த திருமதி நல்ல முத்து-ராமமூர்த்தி என்ற அம்மையாரும் இதேபோலச் செய்தாராம்!

சொத்தின்மதிப்பு 6-லட்சம் பவுன்

4,20,000 பவுன் மரண வரியாக வசூலிக்கப்படும்!

லண்டன், ஏப். 22—
பெர்னார்ட்ஷா 1950ல் இயற்கையெய்தியபோது அவரின் சொத்து 6 இலட்சம் பவுன் இருந்ததாம்.

1951-ல், தற்காலிகமாக வெளியிடப்பட்ட தகவலில் அவருக்கு சுமார் 2 இலட்சம் பவுன் சொத்து இருந்ததாகக் கூறப்பட்டது; ஆனுல் அவருடைய நூல்களின் 'காபி ரைட்' மதிப்பு 4 இலட்சம் என தற்போது மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

மொத்தம் சேர்த்தால் அவரின் சொத்து 6 இலட்சம் பவுனுகிறது. இத்தொகையில் மரணவரியாக 70 சதவிகிதம் — சொத்தில் 4,20,000 பவுன் வரியாக வசூலிக்கப்படுமாம்.

தொழிலாளர் வாழ்க்கைச் செலவு உயர்வு

சென்னை, ஏப். 22—
சென்னை நகரில் தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் 31—3—56 தேதி முடிய உள்ள வாரத்திற்கு 5 புள்ளிகள் அதிகரித்து 347 ஆகியுள்ளது. அரிசி, நல்லெண்ணெய் ஆகிய உணவுப் பொருட்களின் விலை அதிகரித்ததே இதற்குக் காரணமாம்.

மாநில மாநாடு

அல்ஜீரியா - டுனீசியா - மொராக்கோ

எங்கும் விடுதலைக் கிளர்ச்சி

★

திராவிடம்

விடுதலை பெற - சமதர்மம் காண

அறப்போர் தொடுத்திடுவோம் வாரீர் திரண்டு!

திருச்சியில் மே 17,18,19,20-ல்!

தமிழகத்தில் எண்ணெய் ஊற்றுக்கள்

ஆராய்ச்சிக்குப் பின் ரஷ்ய நிபுணர்கள் தரும் தகவல்

புதுடில்லி, ஏப். 24—

சென்னை மாநிலத்தில், குறிப்பாக காவேரி டெல்டா பிரதேசத்தில்—தஞ்சை, தென்னாற்காடு, இராமநாதபுரம் மாவட்டப் பிரதேசங்களில்—எண்ணெய் ஊற்றுக்கள் இருப்பதாக 1938-ல், இந்திய பூகர்ப்ப இலாகா நிபுணரான டாக்டர் கிருஷ்ணன் என்பார் தெரிவித்த ஆராய்ச்சி உரையை, ரஷ்ய நிபுணர்கள் குழு ஒன்று உறுதி செய்திருக்கிறது.

இந்தியாவில் எங்கெங்கு எண்ணெய் ஊற்றுக்கள் உள்ளன என்பதைக் கண்டறிவதற்காக வரவழைக்கப்பட்ட சோவியத் ரஷ்ய நிபுணர் குழுவினர், தங்கள் ஆராய்ச்சியை முடித்துக்கொண்டு மாஸ்கோ பயணமாகுமுன், இந்திய சர்க்காரிடம் இது குறித்த அறிக்கை ஒன்று தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

விரைவிலேயே(!) டில்லி சர்க்கார், இந்த அறிக்கையின் ஆதாரத்தோடு, தென்னாட்டில் உள்ள எண்ணெய் ஊற்றுக்களிலிருந்து எண்ணெய் எடுக்கும் முயற்சியில் ஈடுபடுவர் என்று கூறப்படுகிறது.

எவ்வளவு தெரியுமா ?

இந்தியாவில் பிரதி ஆண்டும் மொத்தம் 2,20,000 டன் சோப் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் 57,800 டன் இந்தியாவில் வெளிநாட்டினருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. சோப் உற்பத்திக்காகப் புதியதாகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கோ, ஏற்கனவேயுள்ள தொழிற்சாலைகளை பரவலாக்குவதற்கே இப்பொழுது அனுமதியளிக்கப்படுவதில்லை.

இலங்கைவாழ் இந்தியர் நிலை

இலங்கைப் பிரதமர் பண்டித நேருவைச் சந்திப்பாராம்

காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு வரும் ஜூன் திங்களில் லண்டனில் நடைபெறும்போது, தான் இந்தியப் பிரதமர் நேருவைச் சந்தித்து, அவருடன் இலங்கை வாழ் இந்தியர் பற்றிய பிரச்சினை குறித்து பூர்வாங்கமாகப் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

முறையான -அதிகாரபூர்வமான பேச்சுவார்த்தைகள், ஜூலைத் திங்களுக்குப் பிறகு நடைபெறலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறாராம்

லண்டனில் இந்தியப் பிரதமரைச் சந்திக்குமுன், இலங்கை வாழ் இந்தியருக்குக் குடிஉரிமை வழங்குவது பற்றி, தான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப் போவதில்லை என்றும் அவர் கூறினாராம்.

மாநில மாநாட்டில்!

உங்களுக்குக் கிடைக்கவிருக்கும் கருத்து விருந்து!

★

1. விடுதலைக் கிளர்ச்சிகள்
2. தொழிலியல் புரட்சி
3. உரிமைக் கிளர்ச்சிகள்
4. தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்
5. தனிநாடு அமைப்பும்—பொருளாதார வசதிகளும்
6. மொழிப் பிரச்சினை
7. திராவிடத்தின் உலகத் தொடர்புகள்
8. தாய்க்குல வரலாறு
9. கலையில் கருத்துப் புரட்சி
10. தத்துவ வரலாறு
11. புத்தர் நெறி
12. உலகைத் திருத்திய உத்தமர்கள்
13. தொழிலாளர் பிரச்சினை
14. இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பம்

பம்பாய் - கல்கத்தா மெயில் விபத்து

காரணம்பற்றி எம். எல். ஏ. விளக்கம்

நாகபுரி, ஏப். 25—

நேற்றுக் காலை, பம்பாய் — ஹௌரா மெயில் வண்டி, மல்காபூர் இரயில் நிலையத்திற் கருகில் விபத்துக்குள்ளாகியதினால் நூற்றுக்கணக்கானோர் காயம்பட்டனர் என்ற சோகச் செய்தி கிடைத்திருக்கிறது

அந்த வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த டி. எல். காட்கே என்ற மத்தியப் பிரதேச சட்டசபை உறுப்பினர், விபத்து நடந்தஉடன் தான் இரயில் பாதைகளைப் பார்வையிட்டதாகவும், அப்போது, 'பிஷ் பிளேட்டு'கள் அகற்றப்பட்டு நிலை தவறிக் கிடந்ததைத் தான் நேரில் கண்டதாகவும், பாதையில் யாரோ கைவைத்திருக்கிறார்கள் என்பதற்கு இது சான்று பகருவதாயும் தெரிவித்திருக்கிறாராம்.

மேலும் அவர், விபத்துஏற்பட்ட விதத்தையும் விளக்கிக் கூறியிருக்கிறாராம்.

விபத்து குறித்து போலீசார் தீவிர புலன் விசாரணை நடத்துவதாகத் தெரிய வருகிறது.

நீதி காப்பாற்றுவாரா? நேரு நேர்வழி நடப்பாரா?

'பம்பாய் மராட்டியருக்கே!'

மக்கள் சபையில் காட்கில் மீண்டும் இடிமுழக்கம்

புதுடில்லி, ஏப். 24—

"பாகிஸ்தானியர் இந்தியாவிற்கு எதிராகப் 'புனிதப் போர்' தொடுக்கவேண்டுமென குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இங்கு மாநில புது அமைப்பு குறித்து பேசுகிற ஒவ்வொருவருக்கும், பொறுப்பு அதிகம் இருக்கிறது.

"உறுதி, நல்லெண்ணம், புரிந்து கொள்ளும் மனப் பாங்கு இவை இருந்தால் இப்போதும் தீர்வு காண முடியாத பிரச்சினையே கிடையாதெனலாம்.

"ஒரு கரடுமுரடான சூழ் நிலையிலும்கூட ஒருவரைப் புரிந்து கொள்ள முயற்சிக்கும் நோக்கம் தான், காந்திய நோக்கமாகும்.

"ஒன்று நியாயமெனப்படும் போது, ஒருவர் நீதி வழங்குவதற்கு எந்தவித எண்ணங்களும் குறுக்கே நிற்கக்கூடாது.

"பம்பாயில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தவேண்டும் என்று கோரப்பட்டதை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்குமானால் மிக நன்றாக இருந்திருக்கும். என்றாலும் சர்க்கார் ஏனோ அதனை ஏற்கவில்லை. அது குறித்து நான் வேறெதுவும் கூற விரும்பவில்லை.

"பம்பாய் நகரின் எதிர்காலத்தை முடிவு செய்ய வேண்டியது மிகவும் முக்கியமான பிரச்சினையாகும்.

"இது குறித்து பல்வேறு பொதுக்கூட்டங்களில் நேரு பேசியிருப்பதும், உள்நாட்டு மந்திரி சில நாட்களுக்குமுன் பேசியதும், பொதுவான மக்கள் கருத்தும் மராட்டியர்கள் பம்பாயைக் கோருவது நியாயமானதே என்பதை ஒப்புவதாகத் தெரிவிப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

"சிலர் கேட்கிறார்கள்—'மராட்டியர்கள் சில நாட்களுக்கு ஏன் காத்திருக்கக்கூடாது? உணர்ச்சிகள் மட்டுப் படட்டும்; உடனடியாக முடிவை மாற்றினால், பலாத்காரத்திற்கும், நிர்ப்பந்தத்திற்கும் சர்க்கார் பணிந்துவிட்டார்கள் என்று பொருள் படுமே'—என்று!

"சர்க்காரில் ஐந்து ஆண்டுகள் மந்திரியாக இருந்திருக்கிறேன் என்பதால், கூறுகிறேன்—நான் இந்த வாதத்தின் பொருளை உணர்கிறேன்; ஆனால், அதேபோது, இந்த மாதிரி சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கு சர்க்காருக்கும் பொறுப்பு இருக்கிறது' என்பதை!

"விதர்ப்பம், மராத்வாடா பகுதிகளை மராட்டியத்துடன் இணைந்து வாழுமாறு தங்கள் செல்வாக்கைக் கொண்டு முடிவு கண்ட சர்க்கார், பம்பாய், நகர் எங்களுக்கு வேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை ஆதரிக்காதவர்களையும் அழைத்து, எங்கள் கோரிக்கைக்கு இணங்குமாறு ஏன் தூண்டக்கூடாது?

"ஜனநாயக வழிகளிலும், பம்பாய் மராட்டியத்துடனேயே இருக்க வேண்டுமென்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது. பம்பாய் நகரசபை, ஐதராபாத் சட்டசபை எல்லாம், பம்பாய் மராட்டியத்துடன்தான் இணையவேண்டும் என்று தீர்ப்பளித்து விட்டன.

"பம்பாய் நகரில் இப்போது பகலில்கூட இருள் சூழ்ந்திருக்கிறது. கூட்டங்களும், ஊர்வலங்களும் தடை செய்யப்பட்டிருக்கின்றன.

தவறான அறிக்கைகளையும், செய்திகளையும் வெளியிடும் மராத்தி அல்லாத இதழ்களைக் கண்டிக்க சர்க்கார் முன்வர மறுக்கின்றனர்.

"மராட்டிய பத்திரிகாசிரியர்கள் கைது செய்யப்பட்டு, சிறைப் படுத்தப்படுகின்றனர்.

"பிரதமர் நேருவுக்கு நான் ஒரு வேண்டுகோள் தர விரும்புகிறேன்; எத்தனையோ பிரச்சினைகளுக்கு அவர் நமக்கு வழிகாட்டியிருக்கிறார். இந்த பிரச்சினையிலும் அவர் வழி காட்டட்டும் — மராட்டியத்தைப் பொறுத்து, இன்றில்லாவிட்டால் நாளைக்கேனும் பம்பாய் நகரம் நிச்சயம் மராட்டியத்துடன் இணைக்கப்படும் என்று தீர்ப்புக் கூறட்டும் — உறுதிமொழி வழங்கட்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவரையில், பம்பாயில் எங்கள் தலைநகரம் அமைந்திருக்கட்டும்.

"செய்வாரா நேரு? நீதி காப்பாரா நேரு?"

என்று இடி முழக்கமிட்டிருக்கிறார், தோழர் என். வி. காட்கில்—மக்கள் சபையில், பண்டித நேருவை எதிரில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு!

ஏறத்தாழ இன்று மாநில புது அமைப்பு மசோதா குறித்துப் பேசிய எல்லோருமே, ஓரிருவரைத் தவிர பம்பாய் மராட்டியத்துடன் இணைக்கப்பட வேண்டுமெனப் பேசியிருக்கின்றனர்.

சென்னை கிளைக் கழகங்களுக்கு :

★

"கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு மே விழாவை ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களும், சார்புக் கழகங்களும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடும்முகத்தான், கழகப் பணிமனையைச் சுத்தம் செய்து, அலங்கரித்து, கொடியேற்றி, வீதிகளில் தோரணங்கள் — வளைவுகள் கட்டி அழகுப்படுத்தி, மே தினச் சிறப்பை அவ்வவ் வட்டப் பொதுமக்களுக்கு விளம்பரத்தாலும், விளக்கவுரையாலும் உணர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"சென்னை மாவட்டக் கழகம், மே திங்கள் முதல் நாளில், சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் பொதுச்செயலாளரின் மேதினச் செய்தியை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக மாபெரும பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறது.

"அன்று பகல் 2 மணிக்கு, இராயபுரம் 'அறிவக'த்திலிருந்து மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு பொதுக் கூட்டத்தை வந்தடையும்.

"மாநில மாநாட்டிற்கு முன் நடைபெறும் ஊர்வலமாக இருப்பதால் எழுச்சியூட்டும் வகையிலும், தி. மு. கழகத்தின் வெகு ஜனசக்தியைக் காட்டுவதற்கான முறையிலும், நடைபெறவிருக்கும மாநில மாநாட்டிற்குப் பொதுமக்களின் ஆதரவு எத்தன்மையது என்பதற்கு இம்மாபெரும் ஊர்வலம ஒரு முன்மாதிரியாக அமைவதற்குமான ஏற்பாட்டில் கிளைக் கழகங்கள், மாநில மாநாட்டிற்கென தயாரித்த புதிய கொடிகளுடன் கலந்து கொள்ளவேண்டும்.

"தி. மு. கழக துணைக் கழகங்களாகிய மன்றங்கள், படிப்பகங்கள், கலையகங்கள் எல்லாம் இவ்வூர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"தொழிலாளர்கள் இந்த அணிவகுப்பை பெரிதாக்கிக் காட்டுவதற்குப் பெரிதும் ஒத்துழைக்குமாறு கிளைக் கழகங்கள் ஆவன செய்ய வேண்டுகிறேன்,"

என்று, சென்னை மாவட்டச் செயலாளர் இளம்பரிதி அவர்கள் அறிவிக்கிறார்.

நாஞ்சில் மாவட்ட செயற் குழுக் கூட்டம்

"27—4—56 மாலை 5 மணியளவில் கழக அலுவலகத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். செயற் குழு உறுப்பினர்களும், கிளைக் கழகச் செயலாளர்களும் அவசியம் கலந்துகொளள வேண்டுகிறேன். மாவட்டக் கழக வரவு - செலவும், மாநில மாநாட்டில் நமது மாவட்டத்தின் சார்பில் நிறைவேற்றப்பட வேண்டியத் தீர்மானங்களும், மேலும் நமது மாவட்டத்திலிருந்து தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டிற்கு தேர்ந்தெடுத்தனுப்பவேண்டிய பிரதிநிதிகளும், இனிமேல் நமது மாவட்டத்தில் நாம் எந்த முறையில் பொதுமக்களிடம் கலந்து பணியாற்ற வேண்டுமென்ற கருத்துக்கள்—கலந்தாலோசிக்க வேண்டியிருப்பதால், இது சம்பந்தப்பட்ட கழகத் தோழர்கள் அனைவரும் அன்றைய கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் வி. எம். ஜான் அறிவிக்கிறார்.

கழகக் கூட்டம்

★

சின்னமனூர்:
வ. உ. சி. திடலில்
28—4—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
கண்ணதாசன்
எம். எம். மேத்தா

★

அரும்பாக்கம்:
தி மு. கழகத் துவக்க விழா
28—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
வேங்கா
பேசுவோர்:
ப. உ. சண்முகம்
வ. குமாரசாமி
தி. மா. லோகநாதன்
பே. சு. ப. சாரங்கபாணி

★

சாத்தான்குளம்:
காந்தி மைதானம்
28—4—56 இரவு 7 மணிக்கு
பேசுபவர்:
கி. மனோகரன்

★

பொன்னிரை :
கடை வீதியில்
(ஆலத்தம்பாடி இரயிலடி அருகில்)
28-4-56 மாலை 5-30 மணிக்கு
பேசுவோர்:
சத்தியவாணி முத்து
வ. மோகன்

ஆயிரக்கணக்கானோர்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்திருக்கிறார்.

பெல்காம் மாவட்டத்தில் 638 பேர்கள்; பம்பாய் நகரில் 209; வடக்கு சதாராவில் 452; நாசிக்கில் 311; கொலாபாவில் 140—என்று பல்வேறு பகுதிகளிலுமாகக் கைதாயினர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

27—4—56 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணியளவில், வட சென்னை தாளமுத்து—நடராசன் முன்னேற்ற மன்றப் பணிமனையில், திரு. ஆனந்தன் தலைமையில், பல பொருட் குறித்து, தோழர்கள் பலர் பேசுவர்.

• • •

27—4—56 மாலை 6½ மணிக்கு, எண் 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, சென்னை-1. முத்தமிழ் மன்றப் பணிமனையில், தோழர் டி கோவிந்தன் தலைமையில், 'மானம்' எனும் பொருள் பற்றி மன்றத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.